**கடுகன்னாவ நகர சபை**
**கண்டி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அந்நிதிக்கூற்றுகள் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 2018 ஜுலை 09 திகதி தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கடுகன்னாவ நகரயின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபளிக்கிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான 5 வாகனங்களின் பெறுமதி ரூபா 4,573,450 இனால் கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தன.

(ஆ) நிலையான 3 வைப்புகளுக்கு கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 68,649 கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு சபைக்கு சொந்தமான புகைக் கருவியின் பெறுமதி ரூபா 150,000 இனால் கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட வாசிகசாலை புத்தகங்களின் பெறுமதி ரூபா 143,433 ஆனபோதும், ரூபா 131,290 என ரூபா 12,143 இனால் குறைத்து கணக்கிடப்பட்டமை மற்றும் அன்பளிப்பாக கிடைத்த ரூபா 91,183 ஆன 358 வாசிகசாலை புத்தகங்கள் கணக்குகளில் விடுபட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டு திசம்பர் 31 திகதிக்கு சபைக்கு சொந்தமான ஆயுர்வேத இருப்புகளின் பெறுமதி ரூபா 74,273 கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டில் பெற வேண்டிய ரூபா 191,700 ஆன நிலுவை வருமானம் கணக்குகளில் விடுபட்டதன் காரணமாக ஆண்டின் வருமானம் மற்றும் பெற வேண்டிய வருமானம அப் பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(எ) வாசிகசாலை புத்தகங்கள் கொள்வனவின் போது கிடைத்த ரூபா 16,708 ஆன வட்டம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டில் பெற வேண்டிய நீதிமன்ற வருமானம் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஒ) முன்னைய ஆண்டுகளில் முத்திரை கட்டண வருமானமாக ரூபா 1,300,000 கிடைத்திருந்த போதும், மீளாய்வாண்டில் முத்திரை குத்தகை வருமானம் ரூபா 239,000 எனக் குறைத்து மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டில் அன்பளிப்பாக கிடைத்த ரூபா 24,200 பெறுமதியான சூழல் பலகைகள் வருமானமாக கணக்கிடப்பட்டிருந்தன.

#### 1.3.2 எதிர்பாராத பொறுப்புகள்

சபையினால் கடை வாடகை மற்றும் அனுமதிப்பத்திர வருமானம் அறவீட்டிற்காக மேலும் அனுமதியற்ற நிர்மாணங்களுக்காக 16 தரப்பினர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த போதும், கணக்கீட்டு குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய 2 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 4,320,317 ஆனதுடன், அவற்றில் ஓராண்டு முதல் 5 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலத்திற்குரிய 2 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 375,345 ஆக இருந்தன.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு செலுத்த வேண்டிய 4 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 4,628,319 ஆனதுடன், அவற்றில் ஓராண்டு முதல் 5 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலத்திற்குரிய 2 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 272,288 மற்றும் 5 ஆண்டுகளை விஞ்சிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,424,388 ஆனது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கூட்டுத்தொகை ரூபா 3,951,271 ஆன 03 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தன.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், முகாமைத் தீர்மானங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், முகாமைத் தீர்மானங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், முகாமைத் தீர்மானங்கள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | ------------------------------------------------ | -------------- | ---------------------- |
| | | ரூபா | |
| (அ) | 1987 இலக்கம் 15 கொண்ட பிரதேச சபை சட்டத்தின் 126 (iii) பிரிவு | 172,500 | சபை அதிகார எல்லையினுள் காட்சிப் படுத்தப்பட்ட 05 அறிவித்தல் பலகைகலிருந்து வருமானம் அறவிடப்படவில்லை. |
| | | | |
| (ஆ) | 1980 இலக்கம் 47 தேசிய சுற்றாடல் அதிகார சட்டத்தின் (அ) பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள இலக்கம் 1533/16 மற்றும் 2008 சனவாரி 25 திகதிய சுற்றாடல் இயற்கை வள அமைச்சரினால் வெளியிடப்பட்ட அதிவிஷேட வர்தமானி. | - | சுற்றாடல் அனுமதிபத்திரத்தை புதுப்பிக்க வேண்டிய 3 நிருவனங்கள் அனுமதிபத்திரத்தை புதுப்பித்திருக்கவில்லை. |
| | | | |
| (இ) | 2016 மார்ச் 17 திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிகையின் | - | |
| | | | |
| | (i) 1 (v) பந்தி | 100,000 | கடையறைகளிற்காக முதற் கொடுப்பனவு பணத்தில் 50 சதவீதத்தை செலுத்தி மீதியை 6 தவணைகளில் அறவிட வேண்டிய போதும் இப்பணம் காலத்திற்குரியவாறு அறவிடப்படவில்லை. |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | (ii) (04) ஆம் பந்தி | 510,968 | மீளாய்வாண்டு இறுதியிலான கடையறை வாடகை அறவிடப்படவில்லை. |
| | | | |
| | (iii) 04 (i) பந்தி | - | 2017 டிசம்பர் 31 திகதிக்கு நிலுவை கடையறை வாடகைக்காக தாமதக் கட்டணம் அறவிடப்படவில்லை. |
| | | | |
| | (iv) 10 பந்தி | - | கடையறைகளை உப குத்தகை வழங்க முடியாத போதும், குத்தகைகார்களினால் பல்வேறு விதத்தில் பல்வேறு தரப்பினர்களுக்கு கடையறைகள் உப குத்தகை வழங்கப்பட்டிருந்தன. |
| | | | |
| (ஈ) | 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 3:4 | | ஓர் நிருவனத்திலிருந்து மாத்திரம் விலை மனு கோரப்பட்டு ரூபா 162,700 ஆன டயர் மற்றும் ரூபா 38,679 ஆன ரோளர் கதவொன்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 5,871,783 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 6,851,137 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டி தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இன் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இன் மொத்த நிலுவை |
| ---------- | ---------- | ---------- | ---------- | ---------- | ---------- | ---------- | ---------- | ---------- |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி மற்றும் குத்தகை | 7,500,000 | 7,635,212 | 7,349,477 | 5,873,578 | 7,500,000 | 7,569,773 | - | 5,452,500 |
| | | | | | | | | |
| வாடகை | 3,309,000 | 4,175,392 | 3,927,442 | 765,395 | 2,759,400 | 3,230,389 | 3,197,895 | 517,445 |
| | | | | | | | | |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,150,000 | 1,426,954 | 1,399,954 | 27,000 | 1,030,000 | 1,235,800 | 1,222,300 | 13,500 |
| ஏனைய வருமானம் | 2,826,000 | 911,428 | 1,916,595 | 736,238 | 5,275,000 | 1,824,263 | 3,206,664 | 704,255 |
| | ---------- | ---------- | ---------- | ---------- | ---------- | ---------- | ---------- | ---------- |
| | 14,785,000 | 14,148,986 | 14,591,468 | 7,402,211 | 16,564,400 | 13,860,225 | 7,626,859 | 6,687,700 |
| | ======== | ======= | ======== | ======== | ======== | ======== | ======== | ======== |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

2016 ஒக்டோபர் 21 திகதிய இலக்கம் 1990 கொண்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி மூலம் குப்பைகள் வரி அறவிட திட்டமிடப்பட்டிருந்த போதும், அவ் வரிப் பணம் அறவிடப்படவில்லை.

### 2.3.3 வீத வரி மற்றும் வாடகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2017 ஜனவரி 01 திகதிக்கு நிலுவை வீத வரி வருமானம் ரூபா 5,452,500 ஆனதுடன், 2017 டிசம்பர் 31 வரை பில் இடப்பட்ட வருமானம் ரூபா 7,635,212 ஆனது. முன்னைய ஆண்டு நிலுவையிலிருந்து ரூபா 2,337,926 மற்றும் பில் இடல் வருமானத்திலிருந்து ரூபா 5,011,551 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், அது முறையே 42 மற்றும் 66 சதவீதமானது. அதன் பிரகாரம் வருமான சேகரிப்பு பலவீன மட்டத்தில் நிலபியது.

(ஆ) அரச நிருவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 788,928 ஆன வீத வரி வாடகை அறவிடப்படவில்லை.

### 2.2.4 வாடகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 263,118 ஆன நிலுவை கடையறை வாடகை காணப்பட்டதுடன், ஆண்டின் பில் இடப்பட்ட வருமானம் ரூபா 2,107,612 ஆனது. முன்னைய ஆண்டு நிலுவையிலிருந்து ரூபா 111,750 மற்றும் பில் இடல் வருமானத்திலிருந்து ரூபா 1,748,012 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலவிய ரூபா 252,826 ஆன சந்தை வாடகை மீதி அறவிடப்படவில்லை.

### 2.2.5 அனுமதிப்பத்திர கட்டணம்

மீளாய்வாண்டு டிசம்பர் 31 திகதியன்று நிலுவை அனுமதிப்பத்திர கட்டண மீதி ரூபா 27,000 தொகை அறவிடப்படவில்லை.

### 2.2.6 ஏனைய வருமானம்

#### (அ) விடுதிக் கட்டணம்

மீளாய்வாண்டு இறுதியில் நிலவிய ரூபா 195,000 ஆன விடுதிக் கட்டண மீதி அறவிடப்படவில்லை.

### 2.2.7 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு திசம்பர் 31 திகதிக்கு பெறவேண்டிய நீதிமன்ற தண்டபணம் ரூபா 113,348 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 426,000 ஆனது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகர சபை அதிகார சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பான விடயங்களை முறையாக்க மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் பொது நலன், வசதிகள் மற்றும் நலன் புரி போன்ற சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தன.

**(அ) துணைச் சட்டம்**

நகர சபை அதிகாரச் சட்டத்தின் 157 பிரிவின் கீழ் 15 பிரதான நடவடிக்கைகளை மேற்கொள்ள துணைச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டிய போதும் 2017 திசெம்பர் 31 திகதி வரையும் 14 விடயங்களிற்கு மாத்திரம் துணைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

**(ஆ) செயல் நடவடிக்கை திட்டம்**

அமுல்படுத்தப்பட்ட துணைச் சட்டத்தின் படி சபை மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த 4 செயற்பாடுகளிற்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஒதுக்கீடு செய்யப்படாமை**

தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் சபை மூலம் மேற்கொள்ள வேண்டியிருந்த 10 செயற்பாடுகளிற்கு வருடாந்த வரவு செலவு திட்டம் மூலம் ஒதுக்கீடு மேற்கொள்ளப்படவில்லை.

**(ஈ) கழிவுப் பொருள் முகாமை**

சபை அதிகார எல்லையினுள் தினத்தோறும் ஒன்று சேறும் 2 டொன் அளவான கழிவுப் பொருட்களை சபையின் டிரக்டர் மற்றும் ஊழியர்களை ஈடுபடுத்தி ஒன்று சேர்த்து உக்கலடையும் 01 டொன் அளவான கழிவுப் பொருட்களை ரூபா 1,000 வீதம் செலுத்தி யடிநுவர கழிவுப் பொருள் கொட்டிலிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. உக்கலடையாத கழிவுப் பொருட்களை வெளியிடுவதற்காக ரூபா 3,110,000 செலவில் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்ததுடன், உக்கலடையாத கழிவுப் பொருட்கள் தற்போது பழைய உத்தியோகபூர்வ வீடொன்றில் பிரிக்கப்பட்டு ஒழுங்கீனமாக குவிக்கப்பட்டிருந்தன.

**(உ) சுற்றாடல் பிரச்சினைகள்**

(i) உக்கலடையாத கழிவுப் பொருட்களை வெளியேற்றும் தளத்தில் தற்போது பெறுமளவு குப்பைகள் ஒன்று சேர்ந்து மலை போல் மேல் எழுந்துள்ளதுடன், அதன் அடியில் தனியார் வீடொன்று மற்றும் அதற்கன்மையில் பல தனியார் வீடுகள் காணப்படுவதனால், அதிக துர்நாற்றம் வீசுவதாக பிரதேச வாசிகள் முறைப்பாடு செய்திருந்தனர்.

(ii) சபை சுற்றுப்புறத்தில் ஒழுங்கீனமாக குப்பையிடப்பட்டததனால் அதன் சுற்றுப்புறம் மிக்க அசுத்தத்துடன் அடிக்கடி துர்நாற்றம் வீசிக் கொண்டிருந்ததுடன், உக்கலடையாத பொருட்கள் கால்வாய்களில் இடப்பட்டிருந்ததனால் கால்வாய்களில் கழிவுப் பொருட்கள் ஒன்று சேர்ந்திருந்தன.

**(ஊ) நிலையான அபிவிருத்தி இலக்கு**

சபையினால் நிலையான அபிவிருத்தி நேக்கின் இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான அளவுகோள்களை இனங்கண்டிக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிலிமதலாவ வாராந்த சந்தையின் நிலுவை குத்தகை பணத்தை குத்தகைக்காரரின் சொத்துக்களை ஏலத்தில் விற்று அறவிடுமாறு வழக்கின் இறுதி தீர்ப்பு வழங்கப்பட்டு ஓராண்டு காலத்தை விஞ்சியிருந்த போதும், ரூபா 252,827 ஆன சந்தை குத்தகை மீதியினை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) பிலிமதலாவ வாராந்த சந்தை குத்தகைக்காரர் ஒருவருடன் ஓராண்டிற்கு ரூபா 1,010,000 இற்காக ஒப்பந்தம் செய்திருக்கையில் முகாமை குழுவினால் பெற வேண்டிய சந்தை குத்தகை தொகையினை குறைத்ததன் காரணமாக மீளாய்வாண்டில் ரூபா 25,000 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

## 3.3 மனித வள முகாமை

### (அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாரான ஆளணிக்கிடையில் 6 பதவிகளில் 12 வெற்றிடங்கள் காணப்பட்டன.

### (ஆ) ஊழியர் கடன்

இறந்த மற்றும் ஓய்வு பெற்ற இரண்டு அலுவலர்களிடமிருந்து ரூபா 12,340 ஆன கடன் மீதி அறவிடப்படவில்லை.

## 3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிறப்பங்காடி கட்டிடத் தொகுதியில் 14 ஆம் இலக்க கடையறையினை ஒப்பந்தம் ஏதுமின்றி நபர் ஒருவர் அலுவலகமொன்றை நடாத்திச் செல்வதுடன், அக் கடையறையினை சபைக்கு சுவீதரித்து முறையாக டென்டர் செய்து குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) சுடலையை பழுதுபார்ப்பதற்கான பெறுகைகள் செயற்பாட்டின் போது குறைந்தபட்ச விலை ரூபா 628,650 இனை முன்வைத்த நிர்வனத்தினால் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள தொழில்நுட்ப பொருளியலாளரினால் விதிந்துரைக்கப்பட்ட போதும், குறைந்தபட்ச விலையினை தள்ளுபடி செய்ததற்கான காரணத்தை குறிப்பிடாது செயலாளரினால் ரூபா 901,224 இற்கு வேறு ஒரு நிர்வனத்தினால் பழுதுபார்த்தல்களை மேற்கொண்டதன் காரணமாக சபைக்கு ரூபா 272,574 இழப்பு ஏற்பட்டிருந்தது.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பை உருதிப்படுத்தாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நகர சபையினால் கழிவுப் பொருட்களை வெளியிட பயன்படுத்தும் காணியின் உரிமையினை கடுகன்னாவ நகர சபையிற்கு ஒப்படைத்துள்ள போதும், அதன் எல்லைகளை இனங்காணக் கூடிய வகையில் வேலியிடப்பட்டு காணியின் உரிமையை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) சபையின் கலாதுருகொடுவ மற்றும் மெங்குஸ்வத்த காணிகளின் எல்லைகளை இனங்கண்டு பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படாமையினால் அனுமதியற்ற கைபற்றுதல் மற்றும் குடியேற்றலுக்காக இடமளிக்கப்பட்டிருந்தன.

### 3.5.2 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கன அடி 500 அளவான இலக்கம் 162/6 கொண்ட அரச விடுதியினை நீண்ட காலமாக பழுதுபார்க்காது அங்கு உக்களடையாத கழிவுப் பொருட்கள் குவிக்கப்பட்டிருந்தன.

(ஆ) புதிய வியாபாரக் கட்டிடத் தொகுதி நீண்ட காலமாக நவீன மயமாக்கப்படாததனாலும் கவர்சிகர தோற்றம் இல்லாததனாலும் நுகர்வோர் பிரவேசம் மிகக் குறைந்த மட்டத்தில் நிலவியது.

(இ) சபைக்கு சொந்தமான பழைய அலுவலகம் எவ்வித பயன்பாடுமின்றி மூடப்பட்டிருந்தது. கண்டி கொழும்பு பாதைக்கு அன்மையில் அமைந்துள்ள வணிகப் பெருமானம் கொண்ட இக் கட்டிடத்தினை பழுதுபார்த்து உபயோகிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.5.3 சொத்துக்களிலிருந்து பெற வேண்டிய வருமானம் பெறப்படாமை

சீறப்பங்காடிக் கட்டிடத் தொகுதியில் மற்றும் புதிய வியாபாரக் கட்டிடத் தொகுதியில் சில கடையறைகள் மூடப்பட்டிருந்ததுடன், இக் கடையறைகளிலிருந்து ரூபா 103,170 ஆன வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 3.5.4 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

ரூபா 1,200,000 பெறுமதியான தீயணைப்பு வண்டி சபைக்கு சுவீகரிக்கப்படவில்லை.

### 3.5.5 விளைவற்ற / குறைபயன்பாட்டு சொத்துக்கள்

(அ) ரூபா 554,000 பெறுமதியான வாகனங்கள் மற்றும் 5 இயந்திர உருப்படிகள் விளைவற்று மற்றும் குறைபயன்பாட்டுடன் நிலவின.

(ஆ) ரூபா 7,967,144 பெறுமதியான கல் அழுத்த உருளை குறைபயன்பாட்டுடன் நிலவியது.

## 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வா ங்கல்கள்

மாகாண வீதி அபிவிருத்தி ஆணைக்குழுவின் பொறியியலாளரினால் சபைக்கு சொந்தமான டெக்டரின் என்ஜின் மற்றும் செலுத்தற் தொகுதியினை பழுதுபார்ப்பதற்கு 2017 மே 02 திகதி இயந்திர பொறியியலாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழின் மீது ரூபா 173,141 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், 2017 மே 15 திகதி வண்டி செலுத்துனரின் அறிவித்தலின் மீது மீண்டும் செலுத்தற் தொகுதி பழுதுபார்க்கப்பட்டு ரூபா 45,338 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.7 பெறுகைகள்

### 3.7.1 பெறுகை திட்டம்

மீளாய்வாண்டில் ரூபா 1,497,833 பெறுமதியான பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யபப்பட்ட போதும், வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7.2 வழங்கள் மற்றும் சேவைகள்

தனி இலாச்சு எழுதுனர் மேசைகள் 2 இனை கொள்வனவு செய்வதற்காக அளவுத்தட்டம் சபை மூலம் வழங்குனருக்கு சமர்ப்பிக்கப்படாததனால் மூன்று நிர்வனங்களினால் பல அளவுகளில் மேசைக்காக விலை மனுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

### 3.7.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அடுபென்வத்த பாதையை அபிவிருத்தி செய்தல்

2017 ஆண்டு நகர சபை நிதியத்தின் கீழ் அடுபென்வத்த பாதையை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 200,000 ஆன மதிப்பீட்டின் மீது ரூபா 195,923 தொகையிற்கு கடவத்கம கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. பாதை மேற்பரப்பு உரிய நியமத்தில் இருக்காததுடன், பாதை இருபக்கமும் கொன்கிரீட் Honeycomb (தேன் கூடு) நிலைமையில் காணப்பட்டன. பாதையின் உட்புரத்தை

மட்டப்படுத்த மெடல் இடப்பட்டிருந்ததுடன், அக்கற்கள் கொன்கிரீட்டுடன் இனையாததனால் இலகுவில் கலரக்கூடிய நிலை அவதானிக்கப்பட்டது.

(ஆ) **பஹல கடுகன்னாவ ரஜபிஹில்ல மாவத்த பாதையை அபிவிருத்தி செய்தல்**

2017 ஆண்டு நகர சபை நிதியத்தினால் பஹல கடுகன்னாவ ரஜபிஹில்ல மாவத்த பாதையை அபிவிருத்தி செய்ய ரூபா 500,000 ஆன மதிப்பீட்டின் மீதி கடவத்கம கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு 2017 செப்டம்பர் 07 திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந் நிர்மாணம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இப் பாதையை பயன்படுத்தும் பயன்பாட்டாளர்களின் அளவு எவ்வளவு சாத்தியப்பாட்டு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) இப் பாதையை செய்கையில் சதுர மதகொன்றை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும், அது உரிய நியமத்தில் செய்யப்படாததுடன் மதகிற்கு நீர் உட்புகும் இடம் ஆளமற்ற குறிகியதாக இருப்பதனால் பெறுமளவு நீர் வருகின்ற போது நிரம்பி ஓடுவதற்கான சந்தர்ப்பம் கானப்பட்டது.

(iii) பக்க மதில் கட்டுகையில் அதன் சாந்தின் நியமம் மற்றும் நிறைவு திருப்திகரமற்றதுடன், பௌதீக பரிசோதனையின் போது Honeycomb (தேன் கூடு) நிலைமை ஒன்று மற்றும், கொன்கிரீடினை இலகுவில் உடைத்து அகற்ற முடியுமெனவும் அவதானிக்கப்பட்டன.

(iv) இம் மதிலிற்காக 2017 நவம்பர் 09 திகதி கொன்கிரீட் இடப்பட்டிருந்ததுடன், 2017 நவம்பர் 16 திகதியன்று கூட அதன் செடலின் பலகைகள் கலற்றி அகற்றப்பட்டிருந்தன.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டினுள் வருமானம் மற்றும் செலவின விடயங்கள் இடையில், ஒதுக்கீடு மாற்றப்பட்ட பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் இடையில் கனிசமான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 28 செலவின விடயங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 822,400 ஆன ஒதுக்கீட்டிலிருந்து எவ்வித செலவும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 34 செலவின விடயங்களில் தேறிய ஒதுக்கீட்டிற்கும் உள்ளவாரான செலவிற்கும் இடையில் 04 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையான வீச்சலவு முரன் நிலவியது.

(இ) 17 வருமான விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாரான வருமானத்திற்கிடையில் 03 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சலவு முரன் நிலவியது.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு திட்டத்திற்கமைய ஆண்டு முழுவதும் பல துறைகளிற்குரிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட வேண்டிய போதும், வரவுகள் மற்றும் செலவுகள் தொடர்பில் மாத்திரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட்டிருந்தன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன், பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விஷேட கவனம் கோரப்படுகின்றன.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | (i) | சில நிலையான சொத்துக்கள் செயலற்று நிலவின. |
| | | (ii) | சொத்துக்கள் கணிப்பீடு செய்யப்படாமை |
| (ஆ) | கணக்கீடு | (i) | சொத்துக்களை இனங்கண்டு கணக்கிடப்படாமை. |
| | | (ii) | கடன்படுனர் மற்றும் கடன்கொடுனர் மீதிகள் குறைத்துக் காட்டப்பட்டமை |
| (இ) | வாகன கட்டுப்பாடு | (i) | தின ஓட்டப்பதிவுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை. |
| | | (ii) | சில வாகனங்கள் குறை பயன்பாட்டுடன் நிலவியமை. |
| (ஈ) | வருமான சேகரிப்பு | (i) | நிலுவை வருமானம் அறவிடப்படாமை. |
| (உ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | (i) | கடன்பட்டோர் மீதிகள் அறவிடப்படாமை. |
| | | (ii) | கடன்கொடுத்தோர் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஊ) | ஒப்பந்தக் கட்டுப்பாடு | (i) | நிர்மாணங்களுக்காக டென்டர் நடைமுறை பின்பற்றப்படாமை. |
| | | (ii) | கருத்திட்டங்களை தேர்ந்தெடுக்கையில் சாத்தியப்பாட்டு ஆய்வு செய்யப்படாமை. |
| | | (iii) | நிர்மாணங்களின் நிறைவு பலவீன மட்டத்தில் நிலவுகின்றமை. |